DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 446 / 2015 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 5 |
| Name | திருமதி பாப்பா |
| Husband Name | குணபாலன் |
| Village | பொடியனூர் |
| Taluk | தென்காசி |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 61 |

**(எதிரி ஆஜரில்லை: எதிரிதரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 07-04-2026.(நேரம்: 01.05PM )**

**முதல்விசாரணை**

1.நான் பொடியனூரில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன்.

2. நான் வீட்டில் இருந்து பீடி சுற்றும் வேலை செய்து வருகிறேன்.

3.திருச்செந்தூரில் இருந்து சாமி கும்பிட்டு விட்டு நான், என் மகன், என் கணவர், என் மகள், என் தங்கை மற்றும் அவரது மகள் ஆகியோர் சிறிய ஆம்னிவேனில் எங்கள் ஊரை நோக்கி மதியநேரத்தில் சென்றுக்கொண்டிருந்தோம்.

4.அப்போது எதிரே வந்த வேனை ஓட்டி கொண்டு வந்த நபர் நாங்கள் வந்த ஆம்னி வேனில் வந்து மோதிவிட்டார். அவர் யார் என்று எனக்கு தெரியாது. அவரை நான் பார்க்கவில்லை.

5.எனக்கு அந்த சம்பவத்தின்போது எனது இடது புறங்கையும், வலது நெற்றியிலும் காயம் ஏற்பட்டது.

6.என்னுடன் வந்த நபர்கள் ஒவ்வொருவருக்கும் காயங்கள் ஏற்பட்டது.

7.காயம்ப்பட்ட எங்களை 108 ஆம்புலன்ஸ் மூலமாக திருநெல்வேலி ைஹகிரவுண்ட் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தனர்.

8.நாங்கள் மருத்துவமனையில் இருந்த போது ஆழவார்திருநகரி காவல்நிலைய போலிசார் வந்து விசாரித்தனர்.

9.வழக்கு சம்மந்தமாக எனது கணவர் குணபாலன் வாக்குமூலம் கொடுத்தார். அந்த வாக்குமூலத்தில் எனது மகன் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்தார்.

10. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(அ.சா 5 சாட்சியானவர் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளிப்பதால் அவரை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி வாய்மொழி விண்ணப்பம் அரசு தரப்பில் செய்யப்பட்டது. அ.சா 5ன் சாட்சியை பரிசிலனை செய்ததில் அவர் அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளித்ததாக அறிய முடிவதால் அவரை பிறழ் சாட்சியாக இந்த நீதிமன்றம் அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 28.08.2013 ஆம் தேதி எங்கள் குடும்பத்துடன் திருச்செந்தூர் முருகன் கோவிலில் சாமி கும்பிட்டு வருவதற்காக ஆவுடையானூர் சமுத்திர பாண்டி நாடார்மகன் அலக்ஸ் என்பவருடைய TN76M 2161 என்ற எண் கொண்ட ஆம்னி காரில் புறப்பட்டுசென்றோம் என்றும் காரை அலக்ஸ் ஓட்டிவந்தார் என்றும் திருச்செந்தூரில் சாமி தர்சணம் செய்துவிட்டு மதியம் 03.00 மணியளவில் ஊருக்கு புறப்பட்டு வந்தோம் என்றும் திருச்செந்தூர் டு பாளையங்கோட்டை ரோட்டில் மதியம் சுமார் 03.45 மணியளவில் ராஜங்கபுரம் ஊருக்கு மேல்புறம் கிழக்கில் இருந்து மேற்காக வந்துக்கொண்டிருந்தபோது அதே ரோட்டில் மேற்கில் இருந்து கிழக்காக எங்களுக்கு எதிரே வந்த TN69AW 3755 என்ற எண் கொண்ட TATA Ace லோடு ஆட்டோவை ஸ்ரீவைகுண்டம் குருசு கோவில் தெருவை சேர்ந்த சொக்கலிங்கம் மகன் வைகுண்டராமன் அதிவேகமாகவும் , ஆஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து நாங்கள் வந்த ஆம்னி காரில் நேருக்கு நேராக வந்து மோதிவிட்டார் என்றும் இதில் கார் டிரைவர் அலக்ஸ் காரில் அடிப்பட்டு காரின் உள்ளே சிக்கிக்கொண்டார் என்றும் அவருக்கு அந்த விபத்தில் இடது கால் முட்டிக்கு கீழ் இடது குதிங்கால் ஆகிய இடங்களில் ரத்த காயமும், வலது கால் முட்டிக்கு கீழ் சிராய்ப்பு காயமும் ஏற்பட்டது என்றும் ஸ்டியரிங் அமுக்கியதால் நெஞ்சில் ஊமைக்காயம் ஏற்பட்டது என்றும் எனக்கு தலையில் ரத்த காயமும். வலது கை புஜத்தில் சிராய்ப்பு காயமும் , இடது கை மணிக்கட்டில் அருகில் ஊமை காயமும் வலது கால் தொடையில் சிராய்ப்பு காயமும் எனது கணவருக்கு பிட்டியில் ஊமைகாயமும், எனது மகள் பிரிந்தாவிற்கு இடது பக்க நெற்றியில் ரத்த காயமும், எனது மகன் விக்னேஷ்க்கு வலது கால் முட்டியில் ரத்தகாயமும், இடது கன்னத்திலும், மூக்கின் இடது பக்கம், மேல் உதடு ஆகியவைகளில் சிராய்ப்பு காயமும், எனது தங்கச்சி தேன் மொழிக்கு வலது கால் முட்டியில் சிராய்ப்பு காயமும் அதே போல் மற்றவர்களுக்கும் காயம் ஏற்பட்டது என்றும், 108 ஆம்புலன்ஸ்க்கு நாங்கள் தகவல் சொல்லி வரசொன்னோம் என்றும், 108 ஆம்புலன்ஸ் வந்ததும் அதில் ஏறி

திருநெல்வேலி மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தோம் என்றும் சிகிச்சையில் இருந்த போது எங்களது டிரைவர் அலக்ஸ் சிகிச்சை பலன் இன்றி இறந்துவிட்டார் என்றும் செந்தில், சிவசுப்பிரமணியனும் திருச்செந்தூர் எடிசன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்திருந்தார் என்றும் நாங்கள் சிகிச்சையில் இருந்தபோது ஆழ்வார்திருநகரி காவல் நிலைய உதவி ஆய்வாளர் வந்து விசாரிக்க நடந்த சம்பவத்திற்கு என் கணவர் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், என் மகன் விக்னேஷ் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்தார் என்றும் போலிசார் விசாரணையின் போது சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

ஒ/ம் ராமசங்கரன்
நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.

DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 446 / 2015 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 6 |
| Name | திரு விக்னேஷ் |
| Father Name | குணபாலன் |
| Village | பொடியனூர் |
| Taluk | ஆவுடையானூர் |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 32 |

**(எதிரி ஆஜரில்லை: எதிரிதரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 07-04-2026.(நேரம்: 01.25PM )**

**முதல்விசாரணை**

1.நான் பொடியனூரில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன்.

2. நான் திருநெல்வேலியில் சுசி ஹூண்டாய் ஸ்டோரில் டெக்னிசியனாக வேலை செய்து வருகிறேன்.

3.திருச்செந்தூரில் இருந்து சாமி கும்பிட்டு விட்டு நான், என் தாயார், என் அப்பா, என் அக்கா, என் சின்னம்மா மற்றும் அவரது மகள் ஆகியோர் சிறிய ஆம்னிவேனில் எங்கள் ஊரை நோக்கி மதியநேரத்தில் சென்றுக்கொண்டிருந்தோம்.

4.அப்போது எதிரே வந்த TATA Ace வேனை ஓட்டி கொண்டு வந்த நபர் திடிரென ரோட்டின் வலது புறத்தில் ஏறி நாங்கள் வந்த ஆம்னி வேன் மீது மோதிவிட்டார். நாங்கள் ரோட்டின் இடது புறத்தில் விபத்தினை தவிர்ப்பதற்காக நாங்கள் வந்த ஆம்னி வேனை இறந்துபோன அலக்ஸ்

இடது புறமாக விலக்கி ஓட்டினார். ஆனாலும் விபத்து ஏற்பட்டு விட்டது. விபத்தை ஏற்படுத்திய நபரை நான் பார்க்கவில்லை யார் என்று தெரியாது.

5.எனது அம்மாவிற்கு அந்த சம்பவத்தின்போது இடது புறங்கையும், வலது நெற்றியிலும் காயம் ஏற்பட்டது.

6.என்னுடன் வந்த நபர்கள் ஒவ்வொருவருக்கும் காயங்கள் ஏற்பட்டது.

7.காயம்ப்பட்ட எங்களை 108 ஆம்புலன்ஸ் மூலமாக திருநெல்வேலி ைஹகிரவுண்ட் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தனர்.

8.நாங்கள் மருத்துவமனையில் இருந்த போது ஆழவார்திருநகரி காவல்நிலைய போலிசார் வந்து விசாரித்தனர்.

9.வழக்கு சம்மந்தமாக எனது அப்பா குணபாலன் வாக்குமூலம் கொடுத்தார். அந்த வாக்குமூலத்தில் நான் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் .**அந்த கையொப்பம் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

10. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(அ.சா 6 சாட்சியானவர் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளிப்பதால் அவரை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி வாய்மொழி விண்ணப்பம் அரசு தரப்பில் செய்யப்பட்டது. அ.சா 6ன் சாட்சியை பரிசிலனை செய்ததில் அவர் அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளித்ததாக அறிய முடிவதால் அவரை பிறழ் சாட்சியாக இந்த நீதிமன்றம் அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 28.08.2013 ஆம் தேதி எங்கள் குடும்பத்துடன் திருச்செந்தூர் முருகன் கோவிலில் சாமி கும்பிட்டு வருவதற்காக ஆவுடையானூர் சமுத்திர பாண்டி நாடார்மகன் அலக்ஸ் என்பவருடைய TN76M 2161 என்ற எண் கொண்ட ஆம்னி காரில் புறப்பட்டுசென்றோம் என்றும் காரை அலக்ஸ் ஓட்டிவந்தார் என்றும் திருச்செந்தூரில் சாமி தர்சணம் செய்துவிட்டு மதியம் 03.00 மணியளவில் ஊருக்கு புறப்பட்டு வந்தோம் என்றும் திருச்செந்தூர் டு பாளையங்கோட்டை ரோட்டில் மதியம் சுமார் 03.45 மணியளவில் ராஜங்கபுரம் ஊருக்கு மேல்புறம் கிழக்கில் இருந்து மேற்காக வந்துக்கொண்டிருந்தபோது அதே ரோட்டில் மேற்கில் இருந்து கிழக்காக எங்களுக்கு எதிரே வந்த TN69AW 3755 என்ற எண் கொண்ட TATA Ace லோடு ஆட்டோவை ஸ்ரீவைகுண்டம் குருசு கோவில் தெருவை சேர்ந்த சொக்கலிங்கம் மகன் வைகுண்டராமன் அதிவேகமாகவும் , ஆஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து நாங்கள் வந்த ஆம்னி காரில் நேருக்கு நேராக வந்து மோதிவிட்டார் என்றும் இதில் கார் டிரைவர் அலக்ஸ் காரில் அடிப்பட்டு காரின் உள்ளே சிக்கிக்கொண்டார் என்றும் அவருக்கு அந்த விபத்தில் இடது கால் முட்டிக்கு கீழ் இடது குதிங்கால் ஆகிய இடங்களில் ரத்த காயமும், வலது கால் முட்டிக்கு கீழ் சிராய்ப்பு காயமும் ஏற்பட்டது என்றும் ஸ்டியரிங் அமுக்கியதால் நெஞ்சில் ஊமைக்காயம் ஏற்பட்டது என்றும் எனது அம்மாவிற்கு தலையில் ரத்த காயமும். வலது கை புஜத்தில் சிராய்ப்பு காயமும் , இடது கை மணிக்கட்டில் அருகில் ஊமை காயமும் வலது கால் தொடையில் சிராய்ப்பு காயமும்

எனது அப்பாவிற்க்கு பிட்டியில் ஊமைகாயமும், எனது அக்கா பிரிந்தாவிற்கு இடது பக்க நெற்றியில் ரத்த காயமும், எனக்கு வலது கால் முட்டியில் ரத்தகாயமும், இடது கன்னத்திலும், மூக்கின் இடது பக்கம், மேல் உதடு ஆகியவைகளில் சிராய்ப்பு காயமும், எனது சின்னம்மா தேன் மொழிக்கு வலது கால் முட்டியில் சிராய்ப்பு காயமும் அதே போல் மற்றவர்களுக்கும் காயம் ஏற்பட்டது என்றும், 108 ஆம்புலன்ஸ்க்கு நாங்கள் தகவல் சொல்லி வரசொன்னோம் என்றும், 108 ஆம்புலன்ஸ் வந்ததும் அதில் ஏறி திருநெல்வேலி மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தோம் என்றும் சிகிச்கையில் இருந்த போது எங்களது டிரைவர் அலக்ஸ் சிகிச்சை பலன் இன்றி இறந்துவிட்டார் என்றும் செந்தில், சிவசுப்பிரமணியனும் திருச்செந்தூர் எடிசன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்திருந்தார் என்றும் நாங்கள் சிகிச்சையில் இருந்தபோது ஆழ்வார்திருநகரி காவல் நிலைய உதவி ஆய்வாளர் வந்து விசாரிக்க நடந்த சம்பவத்திற்கு என் அப்பா வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதில் நான் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றும் போலிசார் விசாரணையின் போது சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து எதிரிக்கு ஆதரவாக சம்பவத்தை ஏற்படுத்திய எதிரி யார் என்று தெரியாது என பொய் சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

ஒ/ம் ராமசங்கரன்
நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.